# அன்னை ஹப்ஸா ரழியல்லாஹு அன்ஹா



அன்னை ஹப்ஸா ரலியல்லாஹு அன்ஹா அவர்களின் புனித அடக்கஸ்தலம் - ஜன்னத்துல் பகீஃ, மதீனா

ஹஸ்ரத் ஹப்ஸா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்களின் தகப்பனார் இரண்டாம் கலீபாவான ஹஸ்ரத் உமர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களாவார்கள். இவர்கள் நபித்துவத்தின் ஐந்து வருடங்களுக்கு முன் பிறந்தார்கள். இவர்களுக்கு முதலில், ஹஸ்ரத் குனைஸ் பின் ஹுதைபா என்பவருடன் திருமணமாயிற்று. ஹஸ்ரத் உமர் (ரலியல்லாஹு அன்ஹு) இஸ்லாமாகும் போது இக்குடும்பத்தினர் எல்லோரும் இஸ்லாமாயினர். பத்ர் யுத்தத்தில் அடைந்த காயத்தினால் ஹஸ்ரத் குனைஸ் (ரலியல்லாஹு அன்ஹு) மதீனா வந்து காலமானார்கள். ஹஸ்ரத் உமர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்கர், உதுமான் (ரலியல்லாஹு

அன்ஹூம்) ஆகியோர்களுக்கு ஹஸ்ரத் ஹப்ஸா (ரலியல்லாஹு அன்ஹா) வை திருமணம் செய்துகொள்ளுமாறு கூறினார்கள். இருவரும் சம்மதிக்கவில்லை. பின்னர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களிடம் வந்து வேண்டிக்கொண்டதற்கிணங்க, ஹிஜ்ரி 2 ஆம் ஆண்டில் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களுடன் திருமணம் நடைப்பெற்றது.

ஹஸ்ரத் ஹப்ஸா (ரலியல்லாஹு அன்ஹா) நல்ல மார்க்க ஞானமுள்ளவர்கள். 60 ஹதீஸ்கள் மட்டும் அவர்களால் கூறப்பட்டிருக்கின்றன. அநேகமாய்ப் பகல் காலங்களில் நோன்பு நோற்பார்கள். இரவு காலங்களை இறைவணக்கத்தில் கழிப்பார்கள். காலமாகும்போதும் கூட நோன்புடனேயேயிருந்தார்கள். மக்களிடையே அபிப்பிராய குழப்பங்களை அதிகம் வெறுத்தார்கள். திருக்குர்ஆனின் பிரதி இவர்களிடம்தான் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களால் வைக்கப்பட்டிருந்தது. இவர்கள் ஹிஜ்ரி 41 ஆம் ஆண்டு ஷஃபான் மாதம் அமீர் முஆவியாவின் காலத்தில் மதீனாவில் காலமானார்கள்.




மேலும் பல இஸ்லாமிய பெரியார்களின் சரிதைகளை, எங்கள் இணையத்தளத்தில் வாசியுங்கள்:

www.mailofislam.com